சார்பு நீதிமன்றம், பெருந்துறை

OS No: 05/2009

2025-ம் ஆண்டு ஜீலை மாதம் 03 நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 03.07.2025

Pw1 (சுப்பிரமணியம் )

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

## 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாசாஆ 1 ஒப்பந்த பத்திரம் 1 ம் பிரதிவாதி எனக்கு எழுதி தரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1 ம் பிரதிவாதிக்கு எந்த பிரதி பிரயோஜனமும் செலுத்தப்படவில்லை என்றும் அது செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

## 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் ஆமாம். 2 ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த வழக்கு மூலமும் நான் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரி. அவருக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எதற்காக இரண்டாம் பிரதிவாதியை இந்த வழக்கில்

சேர்த்துள்ளேன் என்றால் எனக்கு பின்னிட்டு அவர் கிரயம் கொடுத்துள்ளதால் அவரை சேர்த்துள்ளேன். அவ்வாறு நான் எதற்காக இரண்டாம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்தேன் என்ற விபரம் தெளிவாக என்னுடைய பிராதில் இல்லை என்றால் சரியல்ல.

இரண்டாம் பிரதிவாதிக்கு யார் பொது அதிகாரம் கொடுத்துள்ளார் என்றால் 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய குடும்பத்தினர் கொடுத்துள்ளார். 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய குடும்பத்தினர் 2ம் பிரதிவாதிக்கு பவர் பத்திரம் கொடுத்ததாக என்னுடைய பிராதில் எதுவும் குறிப்பிடவில்லை எனவும் எனவே இரண்டாம் பிரதிவாதி இந்த வழக்கில் தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கு எந்த கிரய ஒப்பந்தமும் எழுதி தரவில்லை என்றால் சரியல்ல. என் பெயரில் இருப்பதாகச் சொல்லும் கிரய ஒப்பந்தத்தை வைத்துக்கொண்டு எந்த பரிகாரமும் இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக கூற முடியாது என்றால் சரியல்ல.

ஒன்றாம் பிரதிவாதி அவருடைய கூட்டு பங்குதாரர்களுடன் பாகம் செய்து கொள்ளவில்லை என்றால் ஆமாம், நான் 1/7 பங்கு பொதுவில் தான் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளேன். 1/7 பங்கு மட்டும் தான் நான் ஒப்பந்தம் செய்துள்ளதால் அது செக்கு பந்தி கண்டு ஸ்தலத்தில் எங்கு உள்ளது என்று என்னால் பிரித்து சொல்ல முடியாது என்றால் ஆமாம். இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய விற்கிரய உடன்படிக்கை 1.94 ஏக்கர் மற்றும் 2930 சதுரடி சேர்ந்த பூமியில் 1/7 பாகத்திற்கு தான் என்றால் ஆமாம்.4 ம் பிரதிவாதி குறிப்பிட்ட செக்கு பந்தி கண்ட குறிப்பிட்ட அளவில் கிரயம் பெற்று அதில் கட்டிடம் கட்டி அனுபவத்தில் உள்ளார் என்றால் தெரியவில்லை. அவர் குறிப்பிட்ட செக்கு பந்தியில் கிரயம் பெற்று கட்டிடம் கட்டி அனுபவத்தில் உள்ள விவரம் எனக்கு நேரில் தெரியும் என்றும் வழக்குக்காக மறுத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல .

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 3.7.25
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS